12

# பரிசு வாங்குவோம்




## செயற்பாடு 1

**படத்தை அவதானிப்போம்; விடையளிப்போம்.**

1. இந்தப்படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?
2. படத்தில் என்ன என்ன பொருட்களைக் காணலாம்?
3. இந்த இடம் எது?



## செயற்பாடு 2

34

**ஆசிரியர் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

முதலாளி :- வாங்க ... வாங்க
என்ன வேணும்?

முகுந்தன் :- பரிசுப் பொருள் ஒன்று வாங்க வேணும்.

முதலாளி :- என்ன மாதிரியான பரிசு?

முகுந்தன் :- மகனுக்கு விளையாட்டுப் பொருட்கள்
என்றால் நல்ல விருப்பம்.

வியாபாரி :- ஓ... இதைப் பாருங்க.

முகுந்தன் :- இந்தப் பந்து என்ன விலை?

முதலாளி :- இது எண்பது ரூபாய்.

முகுந்தன் :- விலையைக் கொஞ்சம் குறைக்க
முடியுமா?

முதலாளி :- இது நல்ல பந்து, குறைக்க முடியாது.

முகுந்தன் :- சரி. பரவாயில்லை தாங்க.


முதலாளி :- இந்தாங்க.

**சரி / பிழை இடுவோம்.**

1. அப்பா பழங்களை வாங்குகிறார். ☐
2. அப்பா மகளுக்கு பரிசுப் பொருள் வாங்குகிறார். ☐
3. பந்தின் விலை எண்பது ரூபாய். ☐
4. அப்பா பந்து வாங்குகிறார். ☐



## செயற்பாடு 3




**சோடிகளாக இணைவோம்; பொருட்களை அடையாளம் காணுவோம்; உரையாடுவோம்; விலையைக் கேட்டறிவோம்.**

▲ அந்தப் பேனை என்ன விலை?

● அது பத்து ரூபா.

## செயற்பாடு 4

**விஷ்ணுவின் பந்து பேசுகிறது; கலந்துரையாடுவோம்; வாசிப்போம்.**

### பந்து பேசுகிறது

நான் விஷ்ணுவின் பந்து. என் கதையைச் சொல்கிறேன் கேளுங்கள். நான் சீனநாட்டில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டேன். என்னை ஒரு கடையில் வைத்திருந்தார்கள். என்னோடு சில நண்பர்களும் இருந்தார்கள்.

நான் அழகாக இருந்தேன். ஒரு நாள் விஷ்ணுவின் அப்பா கடைக்கு வந்தார். என்னைக் கண்டார். கடையிலிருந்து வாங்கினார்.


விஷ்ணுவுக்குப் பிறந்தநாள் பரிசாகக் கொடுத்தார். விஷ்ணு என்னை நண்பர்களோடு வீசி விளையாடினான். நான் மகிழ்ச்சி அடைந்தேன். இப்போது நானோ பழையவன். விஷ்ணு என்னைக் கவனிப்பதே இல்லை. என்னோடு விளையாடுவதில்லை. நான் இப்போது தனிமையில் இருக்கிறேன்.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| **பரிசு** | - ත්‍යාග |
| **விளையாட்டுப் பொருட்கள்** | - ක්‍රීඩා උපකරණ |
| **விருப்பம்** | - කැමතියි |
| **விலைகூட** | - මිල අධිකයි |
| **குறைக்க** | - අඩු කරන්න |
| **தொழிற்சாலை** | - කර්මාන්ත ශාලාව |
| **பிறந்த நாள்** | - උපන් දිනය |
| **மகிழ்ச்சி** | - සතුට |
| **தனிமையில்** | - තනි ව |

## செயற்பாடு 5

**கலந்துரையாடுவோம்; சோடிகளாக இணைவோம்; படங்களுக்குப் பொருத்தமான வசனங்களைப் 'பந்து பேசுகின்றது' என்ற உரைப்பகுதியில் இருந்து கண்டுபிடிப்போம்; எழுதுவோம்;**



______________________________



______________________________



______________________________



______________________________



______________________________

## செயற்பாடு 6

**'பந்து பேசுகின்றது' என்ற உரைப்பகுதியை அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வசனங்களை முழுமைப்படுத்துவோம்.**






1. நான் சீன நாட்டில் ____________________

   இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டேன்.





2. என்னை ____________________ இருந்து வீட்டுக்குக் கொண்டு வந்தார்.



3. என்னை ____________________ வைத்திருந்தார்.



4. ____________________ சில நண்பர்கள் இருந்தார்கள்.



5. விஷ்ணு என்னை ____________________ வீசி

விளையாடினான்.



## செயற்பாடு 7

**இருவராக இணைந்து வினாக்களை வினாவியும் விடை வழங்கியும் பேசிப் பழகுவோம்.**






நான் — கோயிலில் / வீட்டில் / பாடசாலையில் / வகுப்பில் / மைதானத்தில் / வைத்தியசாலையில் — இருக்கிறேன்.

- கோயிலில் 
- வீட்டில் 
- பாடசாலையில் 
- வகுப்பில் 
- மைதானத்தில் 
- வைத்தியசாலையில் 








நான் —
- கோயிலில்
- வீட்டில்
- பாடசாலையில்
- வகுப்பில்
- மைதானத்தில்
- வைத்தியசாலையில்














— இருந்து
வருகிறேன்.




நான் அம்மாவோடு கோயிலுக்குப் போகிறேன்.

நான்
- நண்பியோடு ______________________
- மாமாவோடு ______________________
- தங்கையோடு ______________________
- மாமியோடு ______________________
- அப்பாவோடு ______________________

## செயற்பாடு 8









**இவற்றுள் உங்களுக்கு விருப்பமான ஒன்றைத் தெரிவு செய்யுங்கள். நீங்கள் உங்களை அந்தப் பொருளாகக் கற்பனை செய்யுங்கள். ஐந்து வசனம் எழுதுங்கள்.**

1. நான் யார்?

2. எங்கே இருந்தீர்கள்?

3. எங்கே இருக்கிறீர்கள்?

4. இப்போது என்ன செய்கிறீர்கள்?



## செயற்பாடு 9

**தமிழில் மொழிபெயர்ப்போம்.**

1. මම පාසලේ සිට එමි.
2. මම කෝවිලේ සිට ආවෙමි.
3. මම කඩේ සිටියෙමි.
4. මම යහළුවන් සමග සෙල්ලම් කළෙමි.
5. මම අම්මාත් සමග කඩේ ගියෙමි.



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



35

**ஞ் - ඤ්**

கொஞ்சம்

மஞ்சள்

இஞ்சி

பஞ்சு

சஞ்சிகை

குஞ்சு

ஞானம்

ஞாபகம்

ஞாயிறு



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. භාණ්ඩයක මිල ඇසීම හා මිල කීම | | | |
| 2. තමන් ගැන කීම හා ලිවීම | | | |